907

உ

முருகன் துணை.

கதிரேசன்பேரில்

# ஆனந்தக் களிப்பு.



மதுரை, புத்தகவியாபாரம்,

**இ. இராமசாமிக் கோனாரால்,**

எக்ஸெல்ஸியர் அச்சியந்திரசாலையில்,

பதிப்பிக்கப்பெற்றது.

1922 [அணா-6

O2G:47
N22
175414

உ

சிவமயம்,



கதிரேசன்பேரில்

# ஆனந்தக் களிப்பு.

## காப்பு.

### குருவிருத்தம்.

வெத்திமாமயில் வேலவர்மீதினிற்
சத்தியானந்தச் சிந்துபுகழ்ந்திட
சத்திவாலை யருள்திருமாமத
அத்திமாமுகனைங்கரன்காப்பதாம்.

### ஆநந்தக்களிப்பு.

தானாத னாதந்த னானா—தந்த
தானாத னாதந்த னாதந்த னானா.

சீர்மேவுங் கதிர்காமம் வாழும்-வள்ளி
தெய்வானை மணவாளன் மீதிலெந்நாளும
பார்புகழவே துதி சிறக்க-எங்கள்
பாரமத யானைமுகன் தன்னருள்பெருக்க

600 008

தானந்த நடனமயி லேறுஞ்-சுவாமி
சரஹண புவானந்தன் மீதிலருள்சேரும்
ஆனந்தக் களிப்பிதனைப் பாட-கையிலே
யிளிமல ரடியைநா னனுதினந்தேட
சதுர்முகன் தேவிநயந் தரவே-யிந்தத்
தாரணிபு லுகந்தகவி வாணாசெயம் பெறவே
கதிர்காம மானகர் சிறப்பாம்-எங்கள்
கண்ணாரு ளால்சொன்ன ஆனந்தக்களிப்பாம்
திசைமெய்த்த புகழ்கொண்டு நாளும்-நல்ல
செல்வமி யாபார தர்மமதுவாழும்
வசியகுலநகரத்தார்தானே-வந்து
வணங்குமெங்கள் கதிரேசன சன்னதியில்தானே
சொன்னகவி தன்னையரங் கேற்ற-வதனில்
சொற்பிழைகள் வாராமலென்னையுமேகாத்த
நன்னய மிகுந்த தெய்வானை-யம்மன்
நற்கமல அடியிணையை நான் றுதிப்பேனே
அருமறைகள் புகழ்துதிகள் பூணும்-வள்ளி
யம்மையென் கவிதனக் கருள்தரவும்வேணும்
குறுமுனியைப் பணிந்துகவி கூற-அதற்கு
குறைகளொன்றும் வாராமல் சபையிலரங்கேற
சீதையால் ராமனு முன்னாலே-வந்து
தெர்ப்ப சயனஞ்செய்ய திருப்புல்லாணியிலே
நாதனருள் கங்கைகுல சீலன்-தங்கம்
ராம சாமிசொன்ன கவிக்கு கந்தவேலன்
எச்சரிக்கை யென்றிடும்பன் கூற-வந்து
இருபுறமுங் காவடிகள் நின்றுவிளையாட
பச்சை மயிலேயருள் சீலன்-நித்தியப்
பட்சம்வைத் தென்கலி யகற்றும்வடிவேலன்
தென்கதிர் மானகர் விளங்க-வந்த
தேவாதி தேவர்ஜெயங் கூறியேமுழங்க

அன்பான சன்னதி யிலங்க-கதிரை
ஆறுமுக வேலருட மாபதி துலங்க
முன்னொரு கோபுர முகப்பும்-எங்கள்
முருகேசன் கோவில்முழுச் செம்பால்வகுப்பும்
அன்னமெனும் தெய்வானை மாடம்-வள்ளியம்மை
யவள்பந் தடித்துவிளை யாடிடுங்கூடம்
மூதண்ட யோகபதி யேனும்-கதிரை
முத்துலிங்க சுவாமியுட சன்னதியைப்பாரும்
நாதமொடு கீதமு முழங்க-வசிய
நகரத்தார் கட்டிவைத்த சத்திரம்விளங்க
காணிக்கை கொண்டுவெகு கோடி-ஜனங்கள்
கதிரேசன் சன்னதிக்கி வருவார்கள்தேடி
மாணிக்க கெங்கை நீராட-இங்கே
மாதவரும் மனிதர்களும் வந்து நிதங்கூட
பொன்னலங் கார நகர் வாசம்-எங்கும்
புகழ்பெற்ற நவரத்ன மேவிளையுந்தேசம்
சொர்னமிகு கதிரைவளமெத்த-தோழி
சொல்லுகிறேன் நாட்டுவளம் வானுலகுதித்த
இந்த்ரனுட ஏவலதி னாலே-வந்த
எழுமேகமு மொன்று கூடியேமேலே
சந்திரனென வாகவுமே வோங்கி-சத்த
சாகர மதில்தாவி தண்ணீரைவாங்கி
மாலென விசும்பிடை படர்ந்து-முகில்கள்
மண்டியே கெற்சித்து மின்னலுமடர்ந்து
நாலுதிசைநாடியே களிந்து-கதிரை
நகர்பூமி யெங்குமழை மாரிகள்பொழிந்து
ஏரிகுளம் வாவிகள் நிறைந்து-வயல்க
ளெங்கெங்கு மேகன்னல் செந்நலும்வளர்ந்து
வீரிய மிகுந்தமுதத்தின்-நல்ல
வெண்கமுகு சோலைமலை மேலெங்குந்தோண

தனியே பழுத்து திருவாவும்-அதனில்
தாவியொரு கொம்போடே கொக்குகளுமேவும்
இனியமலர் வாசனைகள் தேடும்-வாறென்
றிருபத்து நாலுகால் வண்டினங்கூடும்
நாகமது நாகமதிலூரும்-துய்ய
நாகமே புனைந்தசில மாதரையும்பாரும்
நாகமலர் சோகுமலர்முல்லை-யிந்த
நாட்டினிலே மலைபகடுக் கொருகொம்புமில்லை
முல்லையிரு வாட்சிக ளெடுத்து-அந்த
முல்லையிலே யிதலில்லா மடவார்தொடுத்து
வல்லவினை தீரவெனைத்தேடி-பாது
வள்ளிதெய்வானைக் கிடுவார்கள்கோடி
சதுர்மறையும் புகழ்தேவ ரிங்கே-வந்து
தான்வாசஞ்செய்கதிரை மாணிக்ககெங்கை
இதிலே நீராடுவது சித்தி-ஜென்மம்
ஈடேறுஞ் சாயுச்சிய பதவியிலேமுத்தி
கோலமா மலையழகைப் பாரும்-கதிரை
குமரேச னருளாலே வல்வினைகள் தீரும்
மூலகணபதிக்கிளைய வாகன்-கதிரை
முத்துலிங்கோருக் கருள்செய்தயோகன்
மார்மேவும் புலிபுகழுந் தேட்டான்-கதிரை
மகிமைகளைச்சேடனு மலவளவிடமாட்டான்
பூவேவுங்குழல்வள்ளி நேயன்-சுவாமி
புண்ணியனேதேவருக்கும் மனிதருக்கும்நாயன்
பச்சைமால்தனக்கு மருகோனே-சுவாமி
பழனிமலைமீதினிலே மேவுமுருகோனே
வச்சிராயுதன்தம்பி மருகா-உந்தன்
மலரடியெனக்குதித்தந் தாவேணும்முருகா
நவவீரர் துணையான குகனே-நம்பி
நாராயணன்தங்கை யபிராமிமகனே

நவமணியணிந்த வொளிமூவர்-நின்று
நடனமிடுமயிலேறி யெனவந்துகாவா
கனககுண்டலமிட்ட நீதா-சுவாமி
கார்த்திகேயாலட்சம் படைவீரர்தானே
சனமேருபாக்கியமருள் வேலா-எங்கும்
சர்வபரிபூரணானந்தசிவபாலா
ஓராறுமங்கையர்கள் சேயன்-பவனி
ஒய்யாரமாகமயில் மீதுலவுதூயன்
ஈராறுபன்னிருகை யாண்டி-புவன
மெங்கெங்குமேதுதி மிகுந்தமெய்யாண்டி
ஆண்டிபொன்னாண்டிசிவ னாண்டி-பழனி
யாண்டிமலையாண்டிசிலை யாண்டியிவனாண்டி
ஆண்டிமகனாண்டியிவ னாண்டி-நதிகள்
அழகானசாமிமலை திருப்பரங்குன்றாண்டி
சிக்கல்புரவச்சேரி யாண்டி-சுவாமி
திருச்செந்தூரெட்டிகுடி குன்றைக்குடியாண்டி
மிக்கதிருவேரகத் தாண்டி-கதிரை
மேவிவளர்வேல்முருக னாறுமுகத்தாண்டி
சோலைமலைகழுகுமலை யாண்டி-நல்ல
தோகைமலைவிராலிமலை சென்னிமலையாண்டி
வாலையருள்பெற்றவடி வேலா-முனிவர்
மாதவர்க்கேயெந்த நாளுமநுகூலா
விடவரவுபடமும் விசைகெடவும்-படியே
வடவரைகள்கிடுகிடென கெஜமுமறைபடவும்
கடல்சுவறகதிர்மதி கலங்க-தாவிக்
கனவேகமாகவரு மயில்மீதிலங்க
மேலாகிவிளையாடு மெய்யா-வெற்றி
வேலாயுதத்தையு மெடுத்தமுருகையா
சாலோகசாமீப மென்னும்-சுவாமி
சாரூபசாயுச்சிய பதவியிலேமுன்னும்

ஆகவேநின்றபர நாதா-என்னை
ஆதரித்தாளவா வேணுங்குருநாதா
தாகமாயிருக்குதுனைக் காண-வந்த
சுவாமிவருவாயெனது கண்ணெதிரேதோண
அரகராவேலனே நமாவோம்-சுவாமி
ஆறுமுகமாய்வந்த வடிவேநமாவோம்
அரகராமுருகா நமோவோம்-வாலை
யம்பிகைபராசத்தி மைந்தாநமாவோம்
அரகராகுகனே நமாவோம்-சுவாமி
அன்பருக்கன்பான பொருளேநமாவோம்
அரகராதேவா நமாவோம்-சுவாமி
அகிலபுவனத்திலும் நிறைந்தாய்நமாவோம்
மயிலேறுமெழிலா நமாவோம்-பொதிகை
மலைமேவுந்தமிழ்முனிவன் குருவேநமாவோம்
மயிலேறும்கந்தா நமாவோம்-வட்ட
வடவாலிலமேவுமால் மருகாநமாவோம்
மயிலேறும்நாதா நமாவோம்-சுவாமி
மலைமேவும்பரமனுட குருவேநமாவோம்
மயிலேறுகின்ருய் நமாவோம்-தங்க
வடிவானவேலது வுகந்தாய்நமாவோம்
திரிபுரபவாவா நமாவோம்-வள்ளி
பாகனே பவமொழி பவாவாநமாவோம்
பரிபுரபவாவா நமாவோம்-வள்ளி
பாகனே பவமொழி பவாவா நமாவோம்
சரஹணபவாவா நமாவோம்-கந்த
சாமியேசயலொழி பவாவாநமாவோம்
தருமதுரையே நீரு மென்னை-நல்ல
. தருணமிதுகாணிந்த வேளையிலேயென்னை
காவுன்னீரடிகள் தன்னை-நான்
கண்டெனதுகலிதீர வந்துமென்முன்னை

வாவென்றுசொல்லமன மிலையோ-உமக்கு
வள்ளிதெய்வானைவிடை தந்தனுப்பவிலையோ
தஞ்சமென்றேனே யுனக்கு-எனது
சஞ்சலமெனுங்கலியைத் தீர்ப்பாயெனக்கு
அஞ்சறிவுமானதா யகனே-சுவாமி
அகிலாண்டகோடி பிர்ம்மாண்ட நாயகனே
உன்கிருபை தந்துமே கண்பாரும்-இந்த
உலகமுழுதாள்பவனே யென்கலியைத்தீரும்
அன்புபெரும்வானரராஜன் பேரா-சுவாமி
அடியனுன்னடியிணையைக் காண நீரரா
வாவாயென்றேவா நீ யென்றே-சுவாமி
வடிவேலாவாவெனத் தொழுதுநா னின்றே
எவன்றேடினாலுந் தேடட்டும்-நமக்
கென்சொல்லிக் கவிபாடினாலும் பாடட்டும்
நமக்கென்னவென் றிருக்கிறீரோ-சுவாமி
ஞாயமோநானுமுறை யிட்டதறியீரோ
உனக்குமனமிரங்காததேது-எங்க
ளுத்தமிதுரந்தரியின் பாலாவிப்போது
ஐயா நீ கிருபைசெய்ததாலே-இந்த
அகிலாண்டகோடிபூ மண்டலத்தின்மேலே
மெய்யான சரிதையிலகு நகர்-அதற்கு
மேலானகிருபையி லிருப்பவரனேகர்
தவயோகக்காரர்வெகு வெள்ளம்-அங்கு
தங்கியேயிருப்பவர்க ளோமகாவெள்ளம்
அவர்களைப்போல் நான்பிறந்தகலையோ-சுவாமிக்
காளாகவெனக்குவிதி அயனெழுதவிலையோ
அன்னையவளீன்றெடுத்த கெதியோ-எனக்கு
ஆதியிலேமுன்னவர்கள் செய்துவைத்தசதியோ
என்னகுறையிருந்தாலுந் தீர்த்து-உந்தன்
இணையடிக்குளாளாக என்னையுமேசேர்த்து

ஆளாக்கியாளலாகாதோ-எந்த
னகந்தனிலே நீயிருந்து வாழலாகாதோ
பாழான மனங்குவியு திலேயே-என்ன
பாவமோ அதிலிருக்கும் பிசகுதெரியலேயே
வஞ்சகமில்லாமலே கண்பாரும்-முடிவில்
மறலியுட தூதரென்னை வருத்தாமல்காரும்
அஞ்சுதலையாருளுந் துரையே-உமக்கு
அஞ்சுதலையாய்வேத னிருந்ததுவுஞ்சரியே
ஆறுதலைக் கண்டண்டரய்யா-பின்பு
ஆறுதலையாய்ப்பதியை யாண்டாரேமெய்யா
ஆறுபடை வீட்டுக்கதிகாரா-வந்த
அசுரருடனஞ்சாத போர்புரியும்வீரா
சத்தியுமை பாலகனேசாமி-உந்தன்
தாசனுக்கு தாசனெனைக் கார்ப்பதற்கேமி
சுத்தபரி பூரணவுன்னை-ஒதித்
துதிக்குமடி யார்க்குமடி யாகவருளென்னை
பொய்யாதவாழ்வருளவாவா-கந்தா
ஐயாவெனையாளுந் தேவாதிதேவா
ஒய்யாரமான முருகோனே-வந்த
உற்பவமெனுந் துதியைச் செப்புவேனுனே
உரமான வசுரரிடராலே-தெய்வ
ரோடிமுறையிட்டாரே கைலைமலைமேலே
அரனசுரர் மேற்கோபமாகி-கைலை
யான்விழிதனிலே யொருபொறி சிதறியேகி
சரஹணப் பொய்கையிலமர்ந்து-அதுவுஞ்
சந்திரோதயம்போலே பாலனெனவந்து
உருவாகிமலர்மீதிலானூர்-எங்கள்
ஓம்நமசி வாயரெனும் பரமனருள்மகனூர்
அப்பவே சென்னியோ ராருய்-மெத்த
அழகான செந்திரு புயங்களீராருய்

உற்பவமான பனிரண்டு-விழிகள்
ஒளிவாகிவோராறு பெண்கள்பாலுண்டு
அயனையுஞ்சிறையினில் விடுத்தான்-அந்த
அரனுக்கு உபதேசஞ் சொல்லியேகொடுத்தான்
கயமுகா சூரன் முதலோரை-கந்தன்
கைவேலி னலவர்கள் கருவறுத்தாரே
தங்கவடி வேலலங்காரன்-மாது
தையல் தெய்வானை மணமேவு சிங்காரன்
தென்கதிரை மானக ரிலங்கும்-சுவாமி
சிங்காரமா யுனது அருள்கிருபை பொங்கும்
சித்தமு மகிழ்ந்துவரும் லோலன்-வள்ளி
தெய்வானைக்கிணையான சித்ரமயில்வேலன்
சத்திவேலாயுதமு முடையான்-பூண்ட
தண்டைகள் கலீரெனவே வந்தருளும்நடையான்
கடகமெனு மானதிங்களிலே-எங்கள்
கதிரேசன்திருவிழா பவனிவருகையிலே
கடல்போலே பேரிகை முழங்க-விருது
கட்டியமிருபுறமு மருகேதயங்க
செங்காவிப்பட்டாலே கோடி-கொடிகள்
ஜெண்டாவுமாலவட்டக் குடைகள் பலகோடி
மங்காத சாமரைகள் கோடி-வீசி
வருவார்கள் நடனமிடு மடமாதர்கோடி
சேர்க்கையாய் முரசுசங்கூத-நல்ல
செந்தீ வளர்ப்பவர்கள் தான்மறையோத
பார்க்க வைகு மாமுனிவர் வரவே-கவிகள்
பாடியே வரகாா வென்றுபுகழ்பெறவே
ஆணிப்பொன் மாலைகளிலங்க-மொய்த்த
அழகான வாலத்தி தீபமே துலங்க
மாணிக்கப்பேழையி லுகந்தார்-கந்தன்
மதயானை மேலேறியே பவனிவந்தார்

மதகரியோ வருகிறதைப்பாரும்-சுவாமி
மாணிக்கப்பேழையி லுகந்ததையும் பாரும்
கதிர்காம திருவிழா நேத்தி-எங்கள்
கந்தனு முகத்துதிரு வாபரணஞ்சாத்தி
கரியுலவு வனமூடு சென்று-செல்லக்
கதிர்காமம் போய்வந்து நீராடிப்பென்று
சரியான பௌரணையை நாடி-கந்த
சாமிசங் கீதபரி வாரமுடன்கூடி
வாரிபோல் பெருகி நீரோடி-வார
மாணிக்க கெங்கையிலே வந்துநீராடி
கூரான வடிவேல்சுமந்து-எங்கள்
குமரேசன் வள்ளிதனை நாடியேயுகந்து
புள்ளிமயில் வேலர்விரைவாகச்-சென்று
பூவையெனுங் குறயாது கோவிலுக்குளேக
வள்ளியம்மை சுவாமிதனைக் கண்டு-வாரு
மணவாளரென்றபடி பணிந்தன்புகொண்டு
சித்ரமணி மலரணையில் தாவி-நல்ல
செங்கமலக்கரத்தா லணைத்திலர்கள்மேவி
கொத்துமுத்துநத்துவளை திருத்தி-இவர்கள்
குளிர்ந்தவிதமெனமலர் வாசனைகள்பொருத்தி
இங்கிர்த மணுளகுண நீதா-எனக்கு
இனியசுகபோகமத லீலாவிநோதா
எங்கள்குலம் விளங்கவந்த நேசா-சுவாமி
யெனக்கிரங்கி யிதுசமயம் வந்தவிசுவாகா
அத்தைபெற்ற முத்தேயெங்கோனே-யென்ற
ஆரணங்கையுபசரித்து தேனேயம்மானே
முத்திரையிட்டிலங்கு கொங்கையலே-வள்ளி
மோகனமேயென்றந்த வேலவர்கையாலே
கலந்தணைந்த சுகந்தமண வாசன்-எங்கள்
கட்டழகிவள்ளிதனைப் பார்த்துமதபோஜன்

சலதரத்தைப் பழித்தகுழலாளே-இந்திர
தனுதோவென் றதிசயக்கும் புருவநுதலாளே
எந்தனுக்கிசைந்த மனையாளே வள்ளி
இந்திரன்மகள் தெய்வானைக் குகந்ததுணையாளே
வந்துவெகுநேர மாகுதடி-யெந்தன்
மாதுதெய்வானையெனைத் தேடிடுவாள் நாடி
போய்வாரேன் விடைதாடியென்ன-வள்ளி
பூவையவள் கேட்டெந்தன் சாமிநீர்சொன்ன
வாய்ச்சம்பிர தாயம்வெகு வீச்சு-நான்போய்
வாரனென்றுசொன்ன வகைதானென்னபேச்சு
அங்கேபோய் செலுத்துமதிகாரம்-வெந்த
னரண்மனையி லிருந்தாக்கால் நடக்காதோவீரம்
இங்கிரண்டு நாளிருந்துபோனல் -சுவாமி
என்னகுறை வாகிவிடுங்கா ணுமுமக்கதனல்
என்மனையி லிருக்கையிலே அவளேன்-உம்மை
யேன்தேடவேண்டியது அதிலுமக்குப்பயமேன்
உண்மையெனக் கின்னதென் றுதானே-சுவாமி
உரையுமென வேலவரும் வள்ளியென்மானே
இங்கேவந்து நானிருப்பதாலே-யென்னை
யெங்கேயோ வென்றுதெய் வானையொருக்காலே
மங்கையருந் தேடுவா ளின்று-எனக்கு
வள்ளிநீவிடைதாடி போய்வாரேனென்று
இவர்கூற வள்ளிமின்னளே-சுவாமி
யின்றிரவு யிங்கிருந்து போகலாம்நாளை
அவசர முமக்கென்ன அங்கே-சுவாமி
ஆனாலு நீர்போக சம்மதியே னிங்கே
கூடாது உம்மைவிடமாட்டேன்-மூத்த
குடியாளுக்கஞ்சிநான் பயப்படவுமாட்டேன்
தேடியிங்கே தெய்வானைவரட்டும்-என்று
செப்புவதும ஒபபினையும் வள்ளிகைநீட்டும்

பார்த்தேதடிவள்ளிமானே-சற்றும்
பாராம லிம்மொழிக ளேன்சொல்லுவானே
ஆத்திர முனக்கென்ன போடி-தெய்வ
யானைக்கு நிகராவரோ பெண்கள்கோடி
சொந்தமாய்க் கிருபைபாராட்டி-அந்தத்
தோகையரைப் பருவமதில் நான்மாலைசூட்டி
வந்தபடியாலவ ளுனக்கு-மூந்தி
வந்தவளுமானதால் நாளுமவளுக்கு
அடக்கமா யிருப்பதுவே சிலாக்யம்-வள்ளி
ஆனாலுமில்லாத்துக் கதுதானே யோக்கியம்
மடற்கொடி தெய்வானையவ ளிங்கே-நானும்
வந்தவகைதெரியாது தேடுவாளங்கே
போகவிடை தாவென வதட்ட-எங்கள்
பூவையெனுங்குறமாதுக் கதிகோபமூட்ட
மாகனகமேடையி னிலங்கும்-உனது
மனையாட்டிமூத்தகுடி யாளெனவிளங்கும்
தெய்வானைசொந்தமாய்ப் போச்சோ-நானுந்
திருட்டுத்தனமாய்வந்த கள்ளிபோலாச்சோ
கைமாயச்செய்தோமோ நாங்கள்-ஒருவர்
காணாதேமாலையிட்டு வந்தீரோவுங்கள்
சாதியாரேசுவாரோகாண்- நீருந்
தலைமறையஎன்மனைக்கு வருவதுதானேன்காண்
ஆதியிலே நீயெனையு நினைத்து-வந்த
தறியாளோதெய்வானை யும்மையுமழைத்து
கூட்டிவந்தநாரதரைக்கேளும்-வனத்தில்
குளத்தருகி லேமிகுந்த கரடிபுலிவாழும்
காட்டினிலுமக்குதவி செய்தார்-வுங்களண்ணன்
கணபதியைக்கேட்டாலுஞ் சத்தியமாய்சொல்வார்
தேவர்கள் செய்சபைமுன்னாலே-வைத்து
தெய்வயானை யைத்தாலி கட்டினதினாலே

அவள்மாத்திரஞ் சொந்தக் கிளையோ-சுவாமி
ஆனாலுந்தான்கிழக்கு முகமிருக்கவில்லையோ
வள்ளியிவைசொல்லவே திகைத்து-சென்னல்
வளமானதென்கதிரை வேலனும்நகைத்து
கள்ளிபோல் வீணிலிரையாதே-பொல்லாக்
கசடானகுறவருட சாதியொளியாதே
இரண்டுசமு சாரமாகாது-என்று
இந்நிலத்திற் சொல்லுவது சரியானதோது
வண்டார்குல மானே நீ நாடி-வந்த
மணவாளனுக் கெதிர்கள் பேசலாமோடி
நில்லுநான்போய்வாரே னென்று-சொன்ன
நினைவறிந்து வள்ளியவள் சீறியெதிர் நின்று
வல்லபமுமக்கென்ன காணும்-எனக்கு
வகைசொல்லி யப்பாலே நீர்போகவேணும்
என்சமர்த்தைப்பாருமினி யென்றே-வள்ளி
இடைதனிலேசேலையை யிருக்கியெதிர்கொண்டே
அன்புறநெருங்குவது கண்டார்-வள்ளி
அப்பாலே நில்லொன்று சொல்லுறே னென்றார்
சொல்லுகிற சமாச்சார மென்ன-உமது
தொழிலைநான் னெடுகிலு மறிந்துமினியென்ன
நல்லதினி மேற்கொண்டுபார்ப்போம்-உமது
ஞாயமதைதேவசபையிலே சொல்லிக்கேட்போம்
தேவசபையிலே சொல்லிப்பாரு- அவற்குத்
தெரியுமடி தினைப்புனத்தில் நீயிருந்தசீரு
ஓவியமோ உன்னுறுதிகேட்க-எழுதும்
உடன்படிக்கைமுறியுண்டோ கொண்டாடிபார்க்க
உடன்படிக்கை முறியெழுதித் தாரேன்-வள்ளி
யுனக்கேவல் செய்வதற்கு உன்பிறகேவாரேன்
கடக்கவெனைத் தள்ளாதேமானே-யென்று
கட்டிமுத்தமிட்டது கசப்பேறுவானே

தனியே வனத்திலிருபேருங்-கூடுஞ்
சையோகவேளையிலே பார்த்தென்னை நீரும்
இனியசெந்தேனே கற்கண்டோ-உந்த
னிதமென்றுசொன்ன துவு மில்லையோவுண்டோ
முன்னிருந்த இனிப்பென்னபோச்சோ-இப்போ
மூத்தகுடியாளுமக்குச் சக்கரைபோலாச்சோ
என்னை நீர் வசைசொல்வதேனோ-சுவாமி
யென்குலத்தை நீரிகழ்ந்து பேசுவதுமேனோ
தந்தையுங்கள் தேட்டையெடுத்தாரோ-எங்கள்
சாதியார்வந்து நிதந் தின்றுகெடுத்தாரோ
எந்தனறகுறைகளே துண்டோ-சுவாமி
இழுக்கெந்தசாதியிலு மில்லாமலுண்டோ
மங்களகல்யாணமதில் நல்லாள்-அந்த
மணவறையி லென்தகப்பனிட்ட நகையல்லால்
உங்களிடம்வந்தநாட்கொண்டோ-எனக்கு
ருத்ராட்சவடத்துக்கொரு நவமணியுமுண்டோ
மாதிவை யுரைக்கமுத்தையன்-வள்ளி
மங்கைதனைப்பார்த்தேது சொல்லுவார் மெய்யன்
ஏதடி நீபேச்சதிகங் கொண்டாய்-வள்ளி
யென்னுடைய சாதியி லிழுக்கென்னகண்டாய்
குபோன்மகள்போல பேசாதே-உன்னப்பன்
கொடுத்துவிட்டவரிசைகளைவெளியேசொல்லாதே
சபையார்களென்னவறியாரோ-இந்தத்
தாரணியிலுள்ளவர்க ளெவருமறியாரோ
உடுத்திவந்ததுணிக்கிவேறுண்டோ-களிம்பு
ஊறியபித்தளை யோலைக்குவேறுண்டோ
தொடுத்திருந்த கருகமணியோடே-யென்னைத்
துடர்ந்துவரும்போதுனக் கேதுபட்டாடை
வண்ணார்கள் வெளுக்காத கலையுஞ்-சுத்த
வாணியர்கள் எண்ணெயிட் டறியாதகலையும்

புண்ணுக்குப்போலிருக்கு மேலுங்-காட்டில்
புரண்டுசெடி முள்ளிழுத்துசுரண்டிவிட்டகாலும்
எப்போதுங்காய்கிழங்கைத் தின்னும்-நீயும்
இருந்தகெதிதெரியாதாவரும்போதென்பின்னும்
அப்பவேநானழைத்துத்தந்து-நல்ல
வாபரணமானதையு மழகாயணிந்து
செம்பவளமாளிகையமைத்து-உனக்குச்
செங்கமலத்தாதிகளை யேவல்நேமித்து
நம்பிநான் செய்ததைமறந்து-வள்ளி
நாயகமேபேசுவது மென்னடியிகழ்ந்து
மாதேநீபதராதேவாடி-யெந்தன்
மனமுழுதுமறியாமல் சொல்லாதேபோடி
கோதையே இதுவென்னமூர்க்கம்-உங்கள்
கூறறிந்து சொல்லுகிறேன் குறவருட மார்க்கம்
சாராயங்கள்ளுகள் குடித்து-குறவர்
சந்திக்குச் சந்தியே சண்டைகள்பிடித்து
பூராயம்தெரியாமற்கத்தி-கண்ட
பூனைகளை யெறிவார் முசலென்று சூத்தி
தின்பதுவுமுண்டதிகமாக-குறவர்
சேரியிலே நீபழகி வந்தவைபோக
செம்பவளவாயாளே யென்று-சுவாமி
செப்பவேவள்ளியவள் வெஞ்சினங்கொண்டு
விண்ணணம்பேசுவது சீரோ-சுடலை
மீதிலெலும்பான துவைத் தின்றதுவுமாரோ
கண்ணப்பனெச்சிதிங் கலையோ-சிவனுங்
கரிக்காகப்பாலகனைக் கொன்றதுவுமில்லையோ
புத்தியுமக்கில்லாதே போமோ-கெட்ட
புனக்குறவர்பெண்ணை நீர் சம்மதிக்கலாமோ
யெத்திசையும்புகழ்பெற்றநாதா-வென்று
இவள்சொல்லும் வசைகண்டு கூறுவார்தோதா

அடந்தேருவார்குடிமிகுந்தால்-குறவர்
அவர்தனக்கேசெலவுக் கில்லாதிருந்தால்
கடன்வாங்குவார்சம்மதித்து-தாலி
கட்டியபெண்டுகளை யீடாகவைத்து
குடுத்துவிட்டபணத்துக்கீடாக-வைத்த
குறத்திகளைப்பணங்கொத்த குறவன்வெகுவாக
அடுத்தவளையனுதினங்கூடி-இவர்கள்
அஞ்சாறுபிள்ளைகளைப் பெற்றபின்தேடி
பணங்கொடுத்துத் திருப்புகிறபொது-பெற்ற
பாலரையுங்கூடவே கூட்டியவள்மாது
குணமாகமுன்னீடுவைத்த பழைய
குறவனுடன்போவதுங்கள் சாதியிலேமெத்த
இதுபுதுமையிவ்வுலகிலுண்டோ-வள்ளி
யேந்திழையேயிதைவிட லெச்சைவேறுண்டோ
கதிகொண்டமயில்வாகனத்தார்-இந்தக்
கதைசொல்லவேவள்ளி யவளெதிருரைத்தாள்
குறத்தியென்று எனக்குவசைபுரியுஞ்-சுவாமி
கும்பமுனியாலுங்கள் சேதிகொஞ்சம்தெரியும்
மறந்தீரோ நீரறிந்ததில்லையோ என்னப்பன்
மலைவேடன்மகளைப்போய் மாலையிட்டதில்லையோ
சிந்தைமகிழ்ந்தொருபெண்ணைத்தூக்கி-உங்கள்
சிவன்தலையில்வைத்துமே சுமந்ததுக்குச்சாட்சி
நந்திகேசுபரா சொல்லககேட்டேன்-சுவாமி
ஞாயனிசமில்லாமல் நான்சொல்லமாட்டேன்
ஆட்டுக்காலதுணை யெடுத்தார்-உங்க
ளப்பனென்றவனிமுழு தெங்கும்பழித்தார்
கேட்டுப்பாருமதுமாதா ஐயோ-ஒற்றை
மாட்டுக்காரனை வைத்திருந்ததுவும்பொய்யோ
கண்ணுயிரங்கொண்டநேத்தி னொம்மான்
பெண்ணாசை கொண்டல்லோ வந்தவபகீர்த்தி

பெண்ணொருவர் கொடுக்காததைதனால்-பொன்னன்
பெருவயிறுகொண்டுவேழிக் கரையிலிருந்ததினால்
அண்ணனுமே மத்தளங்கொட்ட-சொந்த
அருமைமகனின்றுமே கைத்தாளந்தட்ட
விண்ணவர்கள்கூடியே நகைக்க-வந்த
வேதியரும் மாதவருங் கண்டுபிர்மிக்க
தேவடியாள்போலுமது அன்னை-கூடுந்
தேவசபையிலே நின்று ஆடலையோ முன்னை
பாவலருக் கருள்புரியுஞ்சீலா-இதைப்
பார்த்தவர்கள் சிரியாரோ தங்கவடிவேலா
பத்மாசூரனுக்கு மிகப்பயந்து-உங்கள்
பரமசிவனோடலையோ காட்டுவழி நுழைந்து
கைப்பொருளு மில்லாமல்தேகி-யென்று
கைப்பிச்சை வாங்கலையோ பரமசிவயோகி
கும்பமுனிக்கருள் புரிந்தோரே-யென்று
கூவியேவள்ளிசொல்லு மொழிகளறிந்தாரே
தென்பாக வென்மோகவள்ளி-யிந்த
சீமையிலேதிருடிவருங் குறவர்குலக்கள்ளி
குதிகொண்ட வனக்குறவர்சாதி-வகையைக்
கூறறிந்து சொல்லுகிறேன் கேளுவவர்சேதி
சதிர்பெருகுந் திருவிழாக் கடையில்-ஜனங்கள்
சந்தடிகளாகவே சயனிக்கு மிடையில்
கூசாமல்கூடவேபடுத்து-தூக்கம்
குலையாமல் பணிதிகளைக் கழற்றியேயெடுத்து
பேசாம லோடுவதுகண்டு-குறத்தி
பெரியதனக்காரர்களுமே பிடித்துக்கொண்டு
வம்பிலேதலைமயிரைக்கட்டி-குறத்தி
மார்பிலேயடித்துமெய் சொல்லென்றுகிட்டி
செம்பாணிகொண்டுமே யிருத்தி-அவர்கள்
சேலையையுரிந்துசினமாகவே நிறுத்தி
அடிதண்டமாகவே யடிப்பார்-குறவர்
அப்பவுமெடுக்கவில்லை யென்றுமே துடிப்பார்
தடியடிக்கு அசையாதசாதி-குறவர்
சங்கைகெட்டுநிற்பார்கள் தெரியுமவர்சேதி

என்றிவருரைக்கலுமே மாது-சுவாமிக்
கெதிராகநின்றேது சொல்வாளப்போது
தொண்டர்தொழுகின்ற மயிலேறுஞ்-சுவாமி
சொல்லுவேனுங்கள்குல வளமைகளைப்பாரும்
அடையாளஞ் சொல்லுகிறேன்கேளும்-நல்ல
ஆவினங்கள்குடிவரு மாய்ப்பாடிவாளும்
இடையருடவளவி லென்னுளும்-உறியி
லிருந்தவெண்ணெ திருடினதை யாரென்றுகேளும்
அன்றுடனசோதைகுறிந்து-வந்து
ஆவினங்கள் கட்டுகின்றகயற்றுல் வறிந்து
ஒன்ருகமாதரொரு பக்கம்-கூடி
உரலோடே கட்டினதைச் சொன்னலும்வெட்கம்
கட்டுண்டதும் ரோஷமில்லையோ-பெண்கள்
கட்டியசேலைகளைக் களவாண்டதில்லையோ
வெட்டிய சமர்களத்திலேறும்-கிருஷ்ணன்
விஜயனுடகுதிரைகளை மேய்கலையோபாரும்
ஊத்துகிற கஞ்சிகளை யேத்தார்-கிருஷ்ணன்
ஊர்காலிமாட்டையெலாம் கட்டியங்கேமேய்த்தார்
கூத்ததிக முண்டின்னம் நிரம்ப-சொல்லக்
கூசுதேயென்மனமு மென்றிவளியம்ப
கேட்டவடிவேலவர்கை நீட்டி-வள்ளி
கேளடியுங்களுட வீடுமலைநாட்டில்
நீட்டியிருகால்களை நிறுத்தி-அதனில்
நெட்டுமுட்டாவளை கூட்டியே பொறுத்தி
நத்தியகயிற்றுல் வரிச்சு-மழைக்கு
நனையாமல் மூங்கிலிலையால்மேய்ந்தருச்சு
சுத்திவைத்த சுவரெல்லாமோட்டை-அசந்து
தூங்கவும் விடாதங்குமுணுமுணுத்த மூட்டை
ஆடேறி மேயுமதில்தொல்லை-வீட்டில்
அஞ்சுபேர்தனக்கதிக மிருக்கவிடமில்லை
மூடாத வாசல்களைக்கண்டு-பார்த்து
மூடினுலுசாவொரு முகட்டொழுக்குமுண்டு
தேடாதபொருள்சிலவு காணும்-வைத்த
தீபமுந்தெரியாது தோணுமல் தோணும்

கூடாது குறவீட்டை நம்ப-சற்றே
குந்தவைக்கமுடியாது நசுநசுப்புரெம்ப
குறம்பாடிக் கஞ்சிகளைவாங்கும்-உங்கள்
குறவருடபக்கியெல்லாம் கூறையிலே தூங்கும்
வரம்பேது மில்லையென்னாளும்-என்று
வடிவேலர்சொல்லவே வள்ளிமின்னாளும்
தமக்கென்று சிறுகுடிசைகட்டி-குறவர்
தானிருப்பதுவேவசை யில்லாதகெட்டி
உமக்கொரு தலத்தினிலும் நாடி-சுவாமி
ஒண்டயிடமில்லாமல் மலைக்குமலையோடி
கையிலரைக் காசுமேயில்லாமல்-வீடு
கட்டியேகுடியிருக்க வகையுமில்லாமல்
வெய்யலிலும் வேனலிலுங் காய்ந்து-சுவாமி
மெத்தவரு ஷித்தமழை பனியால்கனிந்து
இருப்பதுவைக் கண்டுமனம்வாடி-உமக்கு
இவ்வுலகிலுள்ளவர்க ளெல்லோருங்கூடி
சிறக்கவேகோவில்க ளமைத்து-உமக்கு
செம்பொன்மணி யாபரணம் விருதுகள் சமைத்து
வடிவேல வாவென்று யெண்ணி-உமக்கு
வரிசையிட்டுவைத்தார்கள் பிரதிஷ்டைபண்ணி
அடியவர்கள் புண்ணியமீ தையா-நீரும்
அழகாள கோவில்களி லிருக்கிறது மெய்யா
தேருமத கரிபரியு மிரவல்-உமக்கு
ஜெயமேள பேரிகையுங் கோயில்களுமிரவல்
ஏறுமயில் வாகனமு மிரவல்-உமக்கு
இட்டநவ ரத்னமணி யாபரண மிரவல்
இத்தனையு முமக்கிரவல் தானே-குறவர்
இருப்பிடத்தைப் பழிக்குகிறீ ரெண்ணமல்வீணே
வெற்றிவே லதுதானேசொந்தம்-உமக்கு
வேறேயொரு ஆஸ்திகளின்மேலென்னதொந்தம்
மச்சமுனி மறைபொருள்களாலும்-உங்கள்
வங்கிஷவகுப்புகளைச் சொன்னாரேகேளும்
மச்சானே மறைபோதும் வேதன்-உமக்கு
வாய்த்ததொருமாமனே அளவளந்ததாதன்

ஆத்தாளோ பாளுருப்பறச்சி-அவளுக்
கருமையுள்ளதமயனையும் வளர்த்தவளுமிடைச்சி
தாத்தாவோ மீன்காரக் கரவன்-உமக்குத்
தளகர்த்தனனவனும் நல்லகுலமறவன்
ஆரானென் றுமையீன்ற தய்யா-சங்க
மாண்டியல்லோ சாதியிலே சொல்வார்கள்மெய்யா
வரமுறைகளில்லாத நாட்டம்-உங்கள்
வங்கிஷங்கள்தெரியாதோ பலசாதிக்கூட்டம்
இதற்குமுன்னே தானறிந்தாலும்-உமக்கு
இசைவேனே நீர்குட்டிக் கரணம்போட்டாலும்
அதற்கென்ன செய்யலாமய்யா-நாங்க
ளானாலுங்குறச்சாதி யென்பதும் பொய்யா
பண்டாரம் நானென் றுகத்தி-எந்தன்
பரணைதிரே வந்தீரே அதுவென்னபுத்தி
கொண்டுகுலம் பேசுவதுபோச்சோ-சுவாமி
கொய்தினை மாவுக்கென கெஞ்சினதும்போச்சோ
பேருதெரியாமலுரு மாறி-வந்து
பிசகுசெய்தமதகரியினாலேமதமீறி
பாரமத யானை வராவிட்டால்-உமது
பாசாங்குக்குள்ளாக மாட்டே னில்லாவிட்டால்
வழகியிந் தாடி குற வஞ்சி-யென்று
வனவேடன் போலவந்து என்னெதிரேகெஞ்சி
களையாகு தெனவந்து மூட்டி-நீரும்
காரியங்கள் கொண்டபின் பேசுகிறீர் கெட்டி
வலிய நான்வந்தேனே தொட்டு-நீரும்
வஞ்சகப்பேசுகிறீ ரிதுவென்னசெட்டு
சலியாமல் நீருருதிசொன்ன-மொழிகள்
தவறுவரோ கலிகாலமானாலுமென்ன
பொன்னடி துலங்கிய என்மாமி-பெற்ற
புண்ணியனேயனுதினமு மகலாமல்சாமி
என்னருகி லிருமென்றுகேட்டால்-சுவாமி
யென்குலத்தை நீர்பழிக்க உமக்குவிளையாட்டா
வையகத்துக் கேர்க்காது என்னை-நீரும்
வஞ்சகமாயிழந்து பேசுவதுதன்னை

தெய்வானையோ சொல்லி விட்டாள்-எந்த
சிறிக்கியுமக் கிவ்வளவு சூதுசொல்லி தொட்டாள்
எப்படியோ நானறியவில்லை-லோக
மெங்கும் நீர்போகாத விடமொன்றுமில்லை
இப்படியு மருந்திட்ட தாரு-உமக்கு
ஏலாதோ சொல்லவந்த மங்கையர்கள்பேரு
வருந்திவிருந் தளித்தவளைச்சொல்லும்-அவளை
மயிர்பிடித்துகொண்டாரேன்சற்றேயிங்கேநில்லும்
மருந்திடு மயக்கமில்லா விட்டால்-எனக்கு
பதில்சொல்ல மாட்டீரோ நானெதுவுங்கேட்டால்
முருக்குவளை தாதிகளே வாடி-நம்ம
முத்துலிங்கசுவாமியை நீ கூட்டிவாபோடி
கருதுமருந் திடுபிசகு தோணும்-எந்தன்
கணவனென்னுங் கந்தருக்குக் கைபார்க்கவேணும்
மின்னாரே யென்றிவளுஞ் சொல்ல-எங்கள்
வேலரிது புதுமையெனக் கேட்டவருமெல்ல
என்னடிவீண்யோசனைகள் கொண்டாய்-நானும்
எவள்வீட்டி லடியிருந்துண்ணதை நீகண்டாய்
என்னுடைய சொல்லுறுதி மீறி-நீயும்
எதிர்பேசினதினாலே யுன்னைநான்சீறி
சொன்னவகை யல்லாது கண்ணே-சும்மா
தோகையேநானுமுனை பேசுவேனோபெண்ணே
மயங்காதே நீவள்ளிமாதே-உந்தன்
மனமறிய நான்சொன்ன தல்லாதிப்போதே
ஜெயமாகநான்போயி வருவேன்-வள்ளி
தினமுமுனைப்பிரியாமல் தெரிசனமுந் தருவேன்
உந்தனைவிட் டகல்வேனோ மானே-என்று
உபசாரஞ் செய்தங்கி ருக்கையிலே தானே
கந்தனையும் கோவிலுக்குள் தேடி-அங்கே
காணாமல் தெய்வானை அம்மன்மனம்வாடி
மங்கையரே சுந்தரப்பிரகாசன்-அந்த
மாணிக்கக் கெங்கைக்குப் போன முருகேசன்
எங்கேயென வேலவரைத் தேடி-நீங்க
ளிது நிமிஷம் வரவேணு மென்றிடவேயோடி

தாதியர்களெல்லோருஞ் சென்று-எங்கள்
சண்முகவேலாயுதனைத் தேடினாரென்று
ஆதிசிவ மாணிக்க கெங்கை-தீர்த்த
மாடவந்தவேலவரைக் கண்டீர்களோ இங்கே
பாதிபிறை நுதலழகி யாளே-அவள்தன்
பர்த்தாவைக்காணோமென்று தேடுவதினாலே
கதித்த புகழ்கொண்ட முனிவோரே-எங்கள்
கந்தனையுங் கண்டதுண்டோ சொல்லுவீர் நீரே
காணிக்கை கொண்டுவந்தோரே-எங்கள்
கட்டழகி தெய்வானை மணவாளனாரே
மாணிக்க கெங்கை நீராட-இங்கு
வந்தவரைக்காணீர்களோ இனியெங்கேதேட
பாங்கியவர் நதியெங்குந்தேட-கோவில்
பணிவிடைக் காரர்தெரு வீதிவழிநாட
ஏங்கியவர் தேடுவது கண்டு-சுவாமி
எங்கோ னுஞ்சிந்தையி லறிந்தன்புகொண்டு
நினைவில் மறக்கா தெய்வயானை-இந்த
நிமிஷமே கூட்டிவா வென்றேவுஞ்சேனை
எனையழைக்க வேணுமென்று தேடி-வாரார்
ஏந்திழையே நான்போயி வரவும்விடை தாடி
தாடியென்று சொல்லவே திகைத்து-வள்ளி
தையலருஞ்சுவாமிதனைப் பார்த்துமேநகைத்து
தேடிவந்தபேர்களை நானடிப்பேன்-அந்த
தெய்வானைவந்தாலுமே சண்டைபிடிப்பேன்
என்னுடைய கணவனையுந்தேட-அவளுக்
கென்ன வதிகாரம் விடை கேழ்க்குறீரோட
மன்னவா இதுவென்ன வென்றே-சொன்ன
வள்ளிதனையுபசாரஞ் செய்தருகில்நின்றே
எனக்குரிய மானே நீகோபம்-அப்போ
என்பேரில் வைக்காதே வீண்மனஸ்தாபம்
உனக்குநான் பிசகுசெய்வேனோ-பெண்ணே
. ஓசனைகள் செய்யாதே நான்மறப்பேனோ
போய்வாரேன்வள்ளி தயவாக-எனக்குப்
புகழந்து விடைதாடி தெய்வானையிடமேக

வாய்திறந்து சொல்லுமென மகிழ்ந்து-என்று
வடிவேலர் கேட்கவே வள்ளியுமுகந்து
மறைபுகழு கின்றவடிவேலா-சுவாமி
மனவருத்தமில்லாமல் போய்வாருஞ்சீலா
இறையவருக் குகந்தமகனுரே-என்று
இவள்சொல்ல வேலர்வழி கூடநடந்தாரே
சித்திர வடிவேலர் நடந்தார்-இங்கே
தேடிவந்த தாதியர்கள் கண்டடிபணிந்தார்
வெற்றிமயிலோனன்பு கொண்டு-கோயில்
மேவியதெய்வானையையுங் கண்டெதிரேசென்று
மங்கையரே எனைத்தேடுவானேன்-நம்ம
வள்ளியம்மைதன்னுடைய கோவிலுக்குப்போனேன்
செங்கமல மாதேயென் கண்ணே-யிப்போ
தேடினது மென்னவகை சொல்லாய்பெண்ணே
தெய்வானை யென்ருர் துணிந்து-அந்த
தேவிசெவ்வேள் பாதமலரடிபணிந்து
வைபோகமான வடிவேலே-உடைய
மணவாளா உமக்குநித மிதுதானே வேலே
இளையாள்மேலிருக்கிற பாசம்-சுவாமி
என்பேரிலேனில்லை யுமக்குவிசுவாசம்
அழையாத விருந்தோ நீர்காணும்-வள்ளி
அவள்மனைக்கு நிதம்வலியப் போகவோவேணும்
முழுக்கவே யும்மாலே யேச்சே-சாதி
மூறைதவறிக்குறவருட சம்மந்தமாச்சே
இழுக்கானசாதியிலேகி-மாலே
இட்டாலுமேன்மையது தருவாரோயோகி
அடிக்கடி நீ ரவள்மனைக்குப்போனல்-மெத்த
அளக்களிப்பாகவே செல்லுவாரானல்
குடிதனி லுயர்ந்தவளுமில்லை-வள்ளி
குறவர்குலமானதால் சொன்னேனென்சொல்லை
நிசமென்று நீரெண்ணு வீரே-உமக்கு
நேர்ந்ததுவும் வள்ளியுட மோகமதவீரே
அசையாம லானந்தமீறி-வள்ளி
ஆசைகொண்டுபேசுகிறீர் நானுமக்குப்பாரி

ஆகிதா னெடுத்ததென்னகோட்டை-புவியில்
அறியாரோ நீரெனக்குத் தேடிவருந்தேட்டை
தேகியென வாண்டிபோ லானீர்-சுவாமி
தேவியவள் வள்ளிதினை மாவுதிங்கப்போனீர்
திரிபுவன மருள்பெற்ற பாலா-உமது
சித்தமதுமெப்படியோ கதிரைவடிவேலா
அரிமருகரே யென்றுரைக்க-எங்க
ளாறுமுகன் சொல்லுவார் தெய்வானைமெய்க்க
மானேநான் உன்வருதிபெற்றேன்-பின்பு
வள்ளிதன்னை மாலையிட்டுக்கூட்டிவந்துவைத்தே
தேனேயென்மேற்பிழைக ளில்லை-உனக்கு
தெரியாதோ வீணாவில் பேசுவதுதொல்லை
கோவிலுக்கு நீபோடியென்று-எங்கள்
குமரேசன் சிம்மாசனத்திலேயொன்று
சேவலொரு கையினிலிருக்க-எங்கள்
சித்திரவடிவேலவரு மேகொலுவிருக்க
சூட தீவாராதனைக்கு-வந்து
சூழ்ந்தார்கள் கோடானு கோடியன்றைக்கு
அடியவர் பணிந்துதுதிபாட-கதிரை
ஆறுமுகன் மீதினில் கவிமாலைசூட
சிம்மாதனத்திலிருக்க-எங்கும்
ஜெயஜெயன வந்தார்கள் சூழவேபெருக்க
அம்மாபரஞ்சோதி பாலன்-நல்ல
அன்புட னருளுவா ராறுமுகவேலன்
துன்பவினை யணுகாமல்தானே-நீங்கள்
சுகமாக வாழ்வீரென் றெல்லவர்க்குத்தானே
தென்கதிரை வேலரருளாக-வந்த
தேவர்களு மனிதர்களுந் தங்கள்பதிக்கேக
சித்தர்களும் வந்து நிதம்பணிய-இந்தச்
செந்தமிழ் தனக்குதவி செய்சுப்பிரமண்ய
கர்த்தனருளாலே குறைவில்லை-ஆருங்
கதிர்காமமென்றாலும் வறுமைகளுமில்லை
தேவர்களும் முனிவர்களும் வாழி-யெங்கள்
திருமாலு மயனரனு முமையாளும்வாழி

நாவலரும் பாவலரும் வாழி-வள்ளி
நாயகன் மேற்கவியி தென்னாளும் வாழி
புள்ளிமயில் வடிவேலும் வாழி-இந்தப்
புவியெங்கு நகரத்தார் புகழ்பெறவே வாழி
வள்ளி தெய்வானையுடன் மேவி-யோக
வாழ்வு பெறுங் கதிரேச ரெந்நாளும் வாழி.

கதிரேசன் ஆனந்தக்களிப்பு, முற்றிற்று.

உ

சிவமயம்.



# கதிர்காமத்து ஏசல்.

சீர்வளருங்கதிரை நாதன்மேற்சிந்துபாடச்
சித்திவிநாயகனை யெண்ணியே-வாலை
சத்திசிவனைத்துதி பண்ணியே

சத்திசிவனருளும் வெத்திவேலவர்மலர்த்
தாளினை தன்னைமறவேனே-கந்த
வேலனுமெங்கள்முருகோனே

கோனெனுமிந்திரனுந் தேவருந்துசெய்யுங்
கும்பன் குருவைப்பணிந்தேத்த-வெகு
இன்முடனேகதை வாழ்த்த

இன்பமுடனேவரு மன்புள்ளதோழியரே
எங்குலதேவனருள் சேரும்-இந்த
தென்கதிர்காமமதைப் பாரும்

தென்கதிர் காமமென்றால் எங்கும்பிரகாசமாகச்
சேவல்கொடி துலங்குவ தேதையா-இந்த
மாவளமாநகரின் மீதையா

மாவளமான இந்தப் பூநகர்தன்னில்வள்ளி
மங்கைக்கிசைந்தமுருகேசன் பெண்ணே-வேல
ரிங்கேயிருக்கிறார்தான் கண்ணே

இங்கேயிருக்கிறவர் செங்கைவேலவ ரென்றால்
அந்தமதகரிமேல்ப் பாரையா-மேவி
அந்தாபவனிவார தாரையா

அந்தாபவனிவரும் கந்தன்பன்னிருகையன்
ஆனைமேலேறிவரு வாரடி-தேவர்
சேனைசேனுதிபதி தானடி

சேனுதிபதியிவ ராணையின்மேலேறிக்கொண்டு
தெருவில்பவனிவரும்லோலனை-வெகு
அருமையாயீன்றவளார் வேலனை

அருமையாயீன்றவளுந் திருமாலுடன்பிறந்த
ஆத்தாளே யெங்கள்பரமேஸ்வரி-கைலை
காத்தாளே மங்கைமங்களேஸ்வரி

காத்தாளே செங்கைவேல னுத்தாளிவளொன்றீரே
கயிலாசநாதர்க்கிவளாரையா-எனக்
கொயிலாக சொல்லுமதுசீரையா

ஒயிலாகஈஸ்பரியுங் கயிலாசநாதருக்கு
உத்தமிசொந்தமனையாளடி-வாலை
சத்திசிவனென்பார்கள் கேளடி

சத்திசிவனையவர் பெற்றிடும் ரதிமதன்
தான்வந்தெதிர்த்ததென்னசீரையா-சிவன்
ஏனவர்தன்னை யெரித்தாரையா

ஏனெரித்தாரென்றுயே மானையுடையவர்மேல்
ஏதுக்குப்பாணம்மதையென்தான்-சிவன்
வாதுக்கணலாகவேதான் செய்தான்

வாதுக்கெதிர்த்துவந்தபோது விஜயன்வில்லை
வாங்கிச்சிவனையடித்தே வைத்தான்-சிவன்
தாங்கியருளவர்க்குமேன் செய்தான்

தாங்கினதவத்தா லோங்கியபார்த்தனெனும்
தானேபொறுத்தாதருள் சிந்தையார்-இந்த
ஆனைமேல்வாரகந்தன் தந்தையார்

ஆனைமுகமும்பெரும் பானைவயறிலங்க
அந்தாயிருக்குராரே பாரையா-ஒரு
தந்தமிலங்கியவராரையா

தந்தமதுதுலங்கவந்துகரமிலங்கத்
தனியேயிருக்கிறவர் தான்பெண்ணே-வள்ளிக்
கினியகுமரன்தமையோன் கண்ணே

இனியகுமரனையுங்கனிவாய்வளர்த்தெடுத்த
ஈசனுக்குயிந்தப்பிள்ளையேனோ-தந்தி
வேஷ மெடுக்க விதிதானோ

வேஷமெடுக்கக்கண்டேசியவள்ளியஞ்சி
வேலனுங்கந்தனைக்கொண்டாடினள்-ஒரு
தாழ்வன்றிமாலையிடக் கூடினள்

தாழ்வன்றியேபுவியில் வாழ்வுமிகுந்தகந்தன்
சங்கையில்லாமல்கெஞ்சிநேரே-குற
மங்கையைக்கூட்டிக்கொஞ்சினாரே

மங்கைகுறவருட சங்கையல்லடிபெண்ணே
வந்தபகவன்முனிவேண்டி-ஆதி
சொந்தமாய்ப்பெற்றவள்ளிதாண்டி
சொந்தமாய்வேலனுக்கு மிந்தவள்ளிக்குமுன்னே
சூட்டவில்லையேமணமாலை-திருப்
பூட்டவில்லையோ புவிமேலே
பூட்டவேதெய்வானையைக் கேட்டுமுன்னாளயிலே
பூமணஞ்செய்தாரடிவேலன்-ஆழி
வாமணன் தங்கையருள் பாலன்
வாமணனேமஞ்செய்து தேமகமாய்மாலையிட்டு
வந்தவர்வட்டக்குடைமின்ன-இந்தத்
தந்திமேலேறிவாறதென்ன
தந்தியிலேறிவாரா ரிந்தத்திருவிழாவின்
சங்கையதுதாண்டி கண்ணே-சுவாமிக்
கிங்கேவளமையிது பெண்ணே
இங்கேவளமையென்று லெங்கும்பகலைப்போலே
இருபுறமும்ஜனங்களேந்தியே-கொண்டு
வருகிறதீபமென்ன காந்தியே
காந்தியுடனேகையி லேந்திக்கொண்டாடிச்சிலர்
கற்பூரதீபமதைதூண்டி-வாரார்
சுப்பிரமணியனுக்கே தாண்டி
தாண்டியுபசரித்து வேண்டிதர்மஞ்செய்ய
சத்திரம்கட்டிவைத்த தாரையா-வேலை
சித்திரமானதிதைப் பாரையா
சித்திரமானவன்ன சத்திரங்கட்டிவைத்தோர்
செந்தமிழ்சேர்நகரத்தாரடி-வைத்த
நந்தவனத்தைச்சுற்றிப்பாரடி
நந்தவனமும்வைத்து சொந்தமடங்கட்டிய
நகரத்தாரென்றுலவர்யாரு-அவர்
புகழ்பெற்றிருப்பதெந்தவூரு

ஊரெனும்பாண்டிதேசத் தாரெனும்பேர்புகழ்ந்து
ஓங்கியதொண் ணூற்ருலீ ராரடி-வெகு
பாங்குள்ளநாட்டுக்கோட்டையாரடி

நாட்டுக்கோட்டையாரென்ருல் வாட்டமில்லாதலங்கை
நாட்டுக்குவந்தவகை யேதையா-புகழ்
தீட்டும்நகரத்தார்கள் தானையா

தானையாவென்றுசொன்ன மானேகொழும்பினிலே
சந்தோஷமாகவேயா பாரமும்-செய்ய
வந்தவர்களிவரெந் நேரமும்

என்னேரமுங்கொழும்பில் சொர்னயாபாரஞ்செய்தார்
இந்தக்கதிர்காமத்தை நாடியே-இவர்
வந்ததென்னபுகழ்கள் பாடியே

பாடியேவேலெடுத்து ஆடிக்கொண்டாடிமாதப்
பௌர்ணமிக்கேவருவாரடி-இங்கே
வருஷங்கள்தோறும்வெகு சீரடி

வருஷங்கள்தோறுமிங்கே வருவாராணுலுஞ்சொந்த
மானகர்க்கேகிஞலப்போதுகாண்-இங்கே
தான்வேலெடுத்துவார தாருகாண்

ஆருகாணென்ருய் புகழேரும்புதுக்கணக்குக்
காகவந்தநகரத்தார்கள்-வெகு
சேகரமாகவரு வார்கள்

சேகரமானகன யோகரெனுமிவர்கள்
செல்வமிகுந்தவரேதோணும்-நல்ல
கல்விமிகுந்தவரே காணும்

கல்வித்திறமையுண்டு செல்வமகிமையுண்டு
கந்தனருளைப்பெற்ற பேருக்கே-வெகு
விந்தையா நாட்டுக்கோட்டையாருக்கே

நாட்டுக்கோட்டையாருக்கு தீட்டும்புகழ்படைத்த
நகரத்தாரென்றிவரைத் தானையா-எங்கும்
சகலபேர்களும் சொல்வ தேதையா

சகலயாபாரதர்மஞ் சகலதிருப்பணியும்
தவருமற்செய்துவந்து மோதினர்-புவியி
லிவரேநகரத்தாரென் றோதினர்

இவர்களைப்போலநேகர் எவ்வளவோதர்மஞ்செய்தார்
ஏனையோகாணுமந்த நாளிலே-அப்போ
தானவர்க்கந்தப்பே ரேனில்லை

பேர்புகழ்சரிகைகிரிகை நேருங்குகனருளும்
பெற்றதினால் நகரத்தாரே-என்று
எத்தலத்திலுமுரைத்தாரே

எத்தலத்திலும்புகழ் பெற்றமதுரைச்சொக்கர்
இருக்குங்கோயிலையெல்லாந் தானையா-பொன்னால்
சுராக்கவலங்கரித்த தாரையா

ஆரென்றாய்பெண்ணே யெங்கும்பேரானதென்மதுரை
ஆலயத்தைப் புதுப்பித்த தாரடி-வடி
வேலனருள் நகரத் தாரடி

வேலனைப்பெற்ற சத்தி வாலைசிவகாமித்தாய்
மேவுஞ்சிதம்பர நடேசனர்-சபை
யாவும்புதுப்பிக்கிற தாரையா

புதுப்பிக்கவேணுமென்று மதிப்பித்துகந்துசெய்தார்
புவியிற் புகழ்நகரத் தாரடி-முகில்கள்
குவியுந்தண்மைபோல் கொடையாரடி

கொடையார்கள்தர்மம்செய்யச்சடையாரேவாணிபத்து
கூடும்முயற்சியுள்ள வாழ்வியோர்-புகழ்
நாடும்வேதாகமத்தின் கேள்வியோர்

நாடுமயோத்திகாசி ராமேஸ்வரம்வரைக்கும்
நகரத்தார்தர்மம் நிலை நாட்டினர்-நித்தியம்
சுபஜெயமங்களத்தைச் சூட்டினர்

சூட்டியவர்க்கருளைத் தீட்டியவேலவர்மேற்
சொன்னகவியெங்கும்பிரகாசம்-ஓகோ
மன்னவருக்கெந்ததேசம்

தேசமென்பதுராமன் சேதுபந்தனஞ்செய்த
சீமான்திருப்புல்லாணி தானடி-தங்கம்
ராமசாமியென்பது நானடி

நானடிக்கடிகந்த நாதன்தனைப்பணிய
நல்லதினங்களெப்பக்காணும்-அதைச்
சொல்லநாமிங்கே வரவேணும்

சொல்லக்கேள்சுக்கிரவாரம் சோமவாரங்கள்மாதம்
தோதானகார்த்திகைக்குத்தானடி-வந்தால்
பாதகங்களகன்று போமடி

பாதகந்தன்னைப்பரி காரமேசெய்யுங் கந்தன்
பாதகந்தனைப்பணிய வேணும்-நாங்கள்
காதல்கொண்டேவருவோம் காணும்

காணுந்தவமிருந்து கதிரைப்பதியுகந்த
கந்தன்செந்தூரில்வளர் யோகண்டி-நல்ல
தொந்தமிட்டாடுமயில் வாகண்டி

வாகன்செந்தூரானென்றால் வையாபுரிபழனி
மாமலைமேலிருப்பதாரு-நல்ல
சாமிமலைக்குகந்த சீரு

சாமிமலைமுதலாய் பூமிதனிலுள்ள
தலங்களெல்லாமிவர் தாண்டி-மேவி
விளங்குங்கதிரைப்பதி யாண்டி

ஆண்டிக்கிவ்வுலகெல்லாம் வேண்டியபதியென்றால்
அத்தலங்களிலேது காணும்-இவர்
சித்தம்வைத்திருப்பதெங் கோனும்

சித்தம்வைத்திருப்பது முத்தரெனுமடியார்
சிந்தையைவிட்டகல மாட்டார்-மாயன்
செந்திருவாழ்கதிரை நாட்டார்

நாட்டாரடியவர்மேல் நாட்டமாயிருந்திட்டால்
நாட்டுப்பதிகளில் செல்வாரோ-நாமும்
கேட்டவரங்கள்தரு வாரோ

கேட்டவரந்தருவார் நாட்டுப்பதியில்செல்வார்
கேசவன்மருக னூர்க்கே-எண்ணி
வாசமாய் நம்பிவந்தோர்க்கே

வாசமுடனேகதி ரேசனைத்தொழுதிட
வாருமையாபுகழ் வாழி-இனி
கூறும்ஜெயமங்களம் வாழி

வாழிகதிரேசனும் வாழிவள்ளிதெய்வானை
வாழியடியவர்கள் வாழி-எங்கள்
மேழிக்கொடிக்குலமும் வாழி

கதிர்காமத்து ஏசல்.

முற்றிற்று.

உ

சிவமயம்.

## கதிர்காமக்கும்மி.

சீர்வளம்பெற்ற குயில்கூவும்நல்ல
தென்கதிர்காம மதில்மேவும்

ஆறுமுகன்கதிரேசனின்மேலெங்கள்
அண்டர்கொண்டாடிய வாசனின்மேல்

மங்களஞ்சேரும் கும்மிபாடவந்து
மாணிக்கப்பிள்ளையார் காப்பாட

சிங்கத்திலேறிய பூரணியேஎந்தன்
செந்தமிழ்க்கேயரும் நாரணியே

சுந்தரநீரணி ஆறுமுகன்மீதிற்
சொல்லுந்தமிழுக்கு நாலுமுகம்

சிந்தைக்கிசைந்தவேளை வாழ்த்திக்கவி
செப்பும் புலவர்களைப்போற்றி
சந்தோஷமாய்க்கும்மிப் பாட்டுரைக்கக்கந்தன்
தையல்தெய்வானையுமே சிறக்க
வந்துதவிசெய்யவேணுமம்மாதானும்
வாழ்த்துங்கவிமாலை பூணுமம்மா
கந்தன்கதிர்காம வேலவனேபுவி
காக்குமறைபுகழ் லோலனே
எந்தனுக்கேயனு கூலனேதொழு
தேத்திப்பணியும் சீலனே
மங்கையரெல்லோரும் வாருங்கடியிந்த
மாணிக்கக்கெங்கை நீராடுங்கடி
சிங்காரமாய்ப்பணி பூட்டுங்கடிமுகம்
சிறந்தகுங்குமந் தீட்டுங்கடி
கூந்தலுக்கேமலர் மாலைகட்டிநல்ல
கோலவர்ணப்பட்டுச் சேலைகட்டி
சேர்ந்திணையாகவே பாடுங்கடிகந்தன்
சேவடிபோற்றிக்கொண்டாடுங்கடி
ஐயமில்லாமலே நாடிவந்தஇந்த
ஆறுமுகன்பதிதேடிவந்த
செய்யிழைமார்களே வாருங்கடிகவிச்
சிறப்புசொல்லுகிறேன் கேளுங்கடி
ஓதியசெந்தமிழ்ப் பாடிடவேயிந்த
ஊர்வளஞ்சொல்லுக் கொண்டாடிடவே
ஏதுபிழைகளிருந்தாலும் சுவாமி
யேழைக்கிரங்கி யெனையாளும்
ஆறுமுகனென்று பேருடையானெனை
யாளும்கதிர்காம ஊருடையான்
சீருடையான்வடி வேலுடையான்வெகு
சித்தர்கள்போற்றிய காலுடையான்

சத்திக்குகந்த மகன் தானேயிவர்
தந்தையுமுக்கண் சிவன்தானே
எத்திசையும்புகழ்மான்மருகன்தன்னே
எத்திக்கொண்டாடலாம் வாருங்கடி
வாசம்புகழ்கதிர் காமத்திலேமழை
மாரிபெய்யவுஞ் சந்தோஷத்திலே
ஆசைமிகுந்துழ வேத்தினர்சென்னல்
அள்ளியவரெங்கும் தூத்தினர்
சென்னல்களெல்லாம் விளைந்திருக்குமெங்கும்
சிங்களநாடு மகிழ்ந்திருக்கும்
கன்னல்தழைத்தெங்கும் மூத்தீனும்பூங்
காவுகளெல்லாம் வளந்தோணும்
மாவுங்கொய்யாவு மடர்ந்திருக்கும்புன்னே
மாம்பிலாவுந் தொடர்ந்திருக்கும்
கூவுங்குயில்மயில் கூட்டமும்வெகு
குஞ்சரங்களெங்கும் நாட்டமும்
கானகத்தில்மயில் ரெம்பவடிபுலி
கரடிமான்மறை கும்பலடி
வானரங்கள்விளை யாடுவதுமெங்கும்
வண்டுகள்கீதங்கள்பாடுவதும்
மாணிக்கக்கெங்கையா ரோடுவதும்நித்தம்
மாதவர்வந்து நீராடுவதும்
காணிக்கைகொண்டு வருவாரேகதிர்
காமத்தைநோக்கி வெகுபேரே
வீதியலங்கார மெத்தவடியிதில்
மேவுஞ்ஜனங்களும் சுத்தமடி
சோதிமயமான கோபுரமுங்கோயில்
சூழ்ந்ததிருமதில் தாவரமும்
குமரன்கோவி லிலங்குதுபாரிதில்
கொட்டியமேள முழங்குதுபார்

அமரர்கூடிய கூடமும்வள்ளி
யம்மைதெய்வானைக்கு மாடமும்
என்னசொல்வேன்கதிர் காமத்தின்கோவி
லிலங்கியவலங் காரத்தினை
சன்னதிகாவலும் சிங்களவர்கோவில்
ஸ்த்தானிகராவதும் சிங்களவர்
நன்னகரெங்கினும் சிங்களவர்கோவில்
நாட்டியக்காரரும் சிங்களவர்
மன்னரசுக் குருத்தவர்கள்விட்ட
மானியங்கள்ரெம்பப் பெற்றவர்கள்
புத்தமதத்திலுகந்தவர்கள் கந்தன்
பூசையில்நித்த மிகுந்தவர்கள்
நித்தமும்சிங்களவர் கூடுவதுமிவர்
நேர்ந்துபணிந்து கொண்டாடுவதும்
தெய்வானைக்கேத்த மலர்கள்கொய்வார்பர
தேசசன்னியாசிகள் பூசைசெய்வார்
வைபோகமிப்படி யுள்ளதடிஸ்தல
மகிமைசொல்லவும் நல்லதடி
எண்டிசைதோறும் புகழ்வார்கள்கொழும்
பெங்கும்சிறந்தகதிரேசன்
கண்டியில்மேவிய தீரனடிகந்தன்
காலாயுதக்கோ வீரனடி
செங்கைவேல்வில்லையும் பெற்றவண்டி அந்த
தென்னிலங்காபுரி மெய்த்தவண்டி
சிங்காரமாகிய வேலனடிஅவர்
சிறப்பைநான்சொல்லக் கேளுங்கடி
சிறப்பைச்சொன்னவ ரேகாணும் அந்தத்
தென்னிலங்கை யென்பததுகாணும்
இருப்பதெந்தவிடங்காணும் அதற்
கெப்படிப்போனல் தடந்தோணும்

M2

கண்டிகொழும்பு மிருப்பதெங்கேஇந்தக்
கார்க்கடல்மத்தியில்த் தீவுமிங்கே
உண்டானகாரணந் தானுமையா அந்த
உண்மையைச்சொல்லவும் வேணுமையா.
சொல்லுகிறேன்கேளடி மின்னுளேதேவர்
சொன்னசபதத்தால் முன்னுலே
வெல்லவேமாருதம் வீசையிலேதள்ள
மேருமுடியிந்தத் திசையிலே
வந்துவிழுந்த இடமாச்சுஇந்த
வாரிக்குமேலே திடலாச்சு
உந்திக்கமலத் துதித்தவருங்கண்டு
உள்ளத்திலெண்ணி மதித்தவரும்
ஏழுசுற்றுக்கோட்டை யாக்கியேஇதற்
கிலங்கையென்னும் பேர்தாக்கியே
ஆளுமென்றுபண நட்பாலேசொல்லி
ஆண்டகுபேரனுக் கிப்பாலே
ராணுவத்தோடேஜெயம்பூண்டான்மன்னன்
ராவணன்தென்னிலங்கையாண்டான்
போனதிரேதா யுகத்திலேவந்த
பொற்கொடிசீதையை வனத்திலே
கண்டுசிறை யெடுத்தோடிவந்தான்ராமன்
கவிப்படையுடன் தேடிவந்தான்
நின்றுகடலைக்கண்டே திகைத்தான் அந்த
நேரம் வருணனையு மழைத்தான்
சீதையினுலே மனமுகந்துராமன்
தொர்பசயனமதிலிருந்து
ஆதிசேதுவெனப் பேர்பொருதிக்கன்னி
யாகுமரி யெல்லைகண்டுறுதி
பரப்பிலேபத்து யோசனையாய்க்கவிப்
படைமலைகொண்டதற்கிணையாய்

உரத்துயோசனை நூறுவட்டும்அணை
உண்டுபண்ணிலெங்கைக்கோட்டைமட்டும்
நடந்துலெங்கையைக் கண்டபின்புராமன்
ராவணனைக்கொன்று சென்றபின்பு
அடர்ந்தராட்சதக் கும்பழியத்திரு
வணைசிதருண்டு தான்மறைய
பின்னுலிலங்கையைச் சீராக்கித்தவப்
பெருமையால் கொஞ்சம் பேராக்கி
அன்னுள்விபூஷண ணுண்டுவாரார்பின்பு
அந்தக்கடற்குள்ளே பூண்டுவாரார்
நாட்டமுள்ளகயற் கண்ணுளேலங்கை
நகரம்நாள்சென்றுபின்னுலே
கோட்டையழிந்து கடலாச்சுமேலே
கொஞ்சமாய்த்தீவிங்கே உண்டாச்சு
அப்பாலித்தீவுசீரில்லாமல்இதில்
ஆளவொருவரு மில்லாமல்
ஒப்பாதகாடு மலையாச்சுபெரி
யோர்களுலாவு மிடமாச்சு
நயமிகுந்த பெருங்காடு வெகு
நாளாயிருந்ததின்பிற்பாடு
இயக்கரென்றெரு ராட்சதனும்இதில்
இருந்தரசிட்டான் ஏச்சவனும்
நத்தியேநாயர் சிலகாலமேல்
நாட்டையாண்டு வருங்காலம்
புத்தரும்வந்திதில் நாடினுர்சிலர்
புத்தமதத்தைக்கொண்டாடினுர்
திசைபுகழ்வங்க தேசாதிராசன்
சிங்கவாகுபெற்ற ஞாயாதி
விஜையராசனும் வந்தாண்டிபூமி
விஸ்தாரங்கண்டு மகிழ்ந்தாண்டி

தலைமன்னாரென்று பேட்டைகட்டிராஜன்
தம்பனைநாடென்று கோட்டைகட்டி
சிலைவலிமையைக்கொண்டாடக்கண்டு
தென்னனியக்கர்மார்கள்கூட
செப்பமுடனிதை யாளவந்தான்வங்க
தேசத்ததிபன் பகனிவன்தான்
அப்பாலித்தீவுக் கரசரடிவந்து
ஆண்டவர்கள் வெகுபேர்களடி
வங்காளர் சிங்காளர் வெள்ளாளர்
மதசமயத்து வல்லாளர்
இங்கேவந்துகுடி யேறினர் இதற்
கிசைந்தரசரு மீறினர்
சிங்களப்பாஷையு மேலாச்சுஇதில்
சிவசமையமு முண்டாச்சு
மங்கையரேசில ராஜாக்கள்புத்த
மதசமயத்தை மேலாக்க
பாண்டிசேரசோளத் தீரர்களும்வந்து
பட்டமாண்டமா வீரர்களும்
வேண்டிக்கோட்டைகள் கட்டிக்கொண்டார் மதம்
வேறுசெய்யச் சண்டையிட்டுக்கொண்டார்
பாவையேயெங்கும் நகராச்சுநல்ல
பாருலகத்திலே பேராச்சு
மேவும்சிவஸ்தல மெத்தவுண்டு அந்த
விஸ்தாரஞ்சொல்லவு முத்தியுண்டு
உன்னிதமான மலையுமுண்டு இதி
லோங்கும்சிவனடி பாதமுண்டு
முன்னீஸ்பரம்வெகு முக்கியமாம் அதில்
மூலகணேசன் சிலாக்கியமாம்
கேட்டவர்க்கே யனுகூலமாம் திருக்
கேஷ்புரமென்றொரு தானமாம்

நாட்டமுள்ளநகு லேஸ்பரமாம் சிவ
நாதர்க்குகந்தகோ ணேஸ்புரமாம்
தண்டேஸ்புரம்வெகு தகுதியாம் ஐயன்
சாத்தாக்கோவிலொரு பகுதியாம்
எண்டிசைமெய்த்த குமராபுரம் புக
ளிலங்கும்சந்திரசே கரபுரம்
கண்டவர்மெய்த்த மாவிட்டபுரம் ராம
கர்த்தரால்செய்த தநேகபுரம்
தொண்டர்துதிக்கும் தலங்களிதாம் பின்னம்
தோணுதிருப்ப தனேகமதாம்
ராமேஸ்புரமிதைச் சேர்ந்ததடி மின்னே
ராமனுதனு லமைந்ததடி
பூமிக்குருத்தான மன்னர்மெத்தப்பட்டம்
பூண்டரசிட்ட நகரமெத்த
கண்டியென்றும்கோட்டைக் காடிதென்று நல்ல
கழனிநீர்கொழும் பூரிதென்றும்
அண்டியவூரெல்லாம் கட்டணமாம்கோட்டை
அனுராசபுர பட்டணமாம்
மூத்துச்சலாவத் துறையுமுண்டு கடல்
முருகிச்சங்கு குளிப்பதுண்டு
ரெத்தினபுரியென்று ஊருமுண்டு அதில்
ரெத்தினமணிகள் விளைவதுண்டு
பன்னகாமமதும் பறைநாடாம் யாழ்ப்
பாணப்பகுதி வெகுநாடாம்
இன்னமிருக்கு தனேகமெல்லை இப்போ
எனக்குச்சொல்லச் சமயமில்லை
கண்டவிடமெல்லாம் மூராச்சு கோவில்
கட்டியகட்டிடம் பேராச்சு
திண்டுமுண்டாப்பழி கொண்டார்கள் நல்ல
சிங்களரோடர சாண்டார்கள்

கண்டியையாண்டிடும் வீரதுங்கன் இதில்
கட்சிவிக்ரம ராஜசிங்கன்
தண்டிகையேறிய சூரர்களும் இவன்
தலைமுறைவரை ராஜர்களும்
தொண்ணூற்றுருமுடி மன்னரடி அதைச்
சொல்லுஞ்சரித்திர மின்னமிடி
விண்ணவர்கள்மெய்த்திடு மானகரில் இதில்
மேவுயரசிட்ட பேரவரில்
கண்டியரசனும் மின்னுலே அவர்
கட்டடம்காணலாம் கண்ணுலே
வண்டனதிமாயக் காரனடி அவன்
வம்மிஷம்நாயக்க ராசனடி
அதற்குமுந்திய ராஜர்தொடுக்கட்டு
ஆண்டவிதமெல்லாம் சீருகெட்டு
மதிப்பதற்கிடந் தோணுமேகாடு
மண்டியிருப்பதுந் தானுமே
இங்கிர்தன்வீரத்தில் சூரசிங்கன் இந்த
இலங்கைநாடெல்லாம் ராசசிங்கன்
சங்கையுடனர சாளயிலே சீமை
தன்னூருவந்தந்த வேளையிலே
சிங்காரக்கப்பலில் பறங்கியே இந்தத்
தீவுக்குள்ளேவந்து இறங்கியே
தங்கச்சிகரம் தனைவகுத்தும் புத்தர்
தாவுங்கழனித் திசையடுத்து
கோட்டையுங்கட்டிக் கொடிபூட்டி அதைக்
கொழும்பென்றுசொல்லிப் பேர்நாட்டி
வேட்டெழுப்பிக்காலிக் கோட்டைகட்டி நல்ல
விஸ்தாரமாத்திரப் பேட்டைகட்டி
தொட்டதிருக்கோண மாமலையும் அந்த
துறைமுகங்களை யாண்டதையும்

ஒட்டாமல்தள்ளி விரைவாகி வந்து
உழர்ந்தாக்காற ருசாராக
ஆண்டுசிலகாலம் விட்டார்கள் பின்பு
ஆங்கிலேயர்வந்து தொட்டார்கள்
வேண்டியதர்மம் நிலைநிறுத்த இந்த
மேதினியையெல்லாம் சீர்திருத்த
கும்பமுனியார்வந்து ஒட்டிக்கொண்டார் இந்தக்
கொழும்புகோட்டையைக் கட்டிக்கொண்டார்
வம்பானகாட்டையும் வெட்டலுற்றூர்கோடு
வங்காளக்கச்சேரி கட்டலுற்றூர்
கண்டியரசனைத் தெரிந்திட்டார்பெரும்
கள்ளர்களைச்சுட்டு யருத்திட்டார்
வண்டிக்கிரோட்டுக ளுண்டுபண்ணியிதில்
மாகாணங்களாய்த் துண்டுபண்ணி
துறைமுகங்களை நேராக்கிகாப்பித்
தோட்டங்களை யெல்லாம்சீராககி
நிறையிலிந்தியாச் சனங்களும்வெகு
நிறைந்ததீர்வைப் பணங்களும்
மின்னல்வேகங்கொண்ட தந்திவைத்தார்பேசி
விளம்பும்ஆபீசை மூந்திவைத்தார்
என்னசொல்லுவேண்டி மின்னரசேஇந்த
இங்கிலீஷ்க்காரர் தன்னரசை
பூட்டிறயிலையும் நடத்திஞர்எங்கும்
புகைவிளக்கையும் பொருத்திஞர்
தாஷ்டீகமான கடலலைக்குமூடத்
தடுத்தணைகட்டி யேநெருக்கி
தண்டவாளசூட்சம் வைத்தாரேமலைத்
தண்ணீரைவாவென் றழைத்தாரெ
தங்கவும்கிங்கார மூண்டாச்சுவெகு
தாழ்வில்லாவாழ்வுக ளுண்டாச்சு
பூமியில்கள்ளர் பயம்போச்சுவெகு
புத்தியும் வித்தையுமேலாச்சு
சாமிகதிரேசன் தன்னருளால்ஒரு
தாழ்வொன்றுமில்லையே தோழிப்பெண்ணே

தாழ்விலாத்தன்மையுடன் வாழும்கவி
சாற்றியமன்னவரே கேளும்
ஆளுங்கதிரேச னித்தலத்தில்வந்த
ஆரம்பத்தின்கதை சொல்லுமையா
ஆரம்பமென்ன புராணத்திலேகதை
அறிந்தமட்டு மிந்நேரத்திலே
கூறவுங்கேளுங்கள் பெண்ணுரேவண்ணனக்
கோலவிழிக்கயற் கண்ணுரே
அண்டமெல்லாமொரு தகத்திலேகட்டி
ஆண்டகிரேதா யுகத்திலே
கொண்டரசாட்சியைச் செலுத்தியேதேவர்
கோனைவெருட்டியே கொளுத்தியே
பாரவினையாளுக் கொஞ்சாதவெகு
படைப்பெருக்கத் துக் கஞ்சாத
வீரப்பிரதாப மிகப்பூண்டமன்னன்
வீரமயேந்திர புரமாண்ட
வாசமுள்ளசூரநாளையிலே அவன்
வந்துபோர்செய்திடும் வேளையிலே
பாசரைவீடு மிதில்தாண்டி கந்தன்
படைப்பெருக்க மிதில்தாண்டி
குன்றெனும்சூரரை தூக்கினுர்தேவர்
கோனுக்கரசை யுண்டாக்கினுர்
அன்றுமுதல்கந்தன் வாசமடியிதில்
அண்டர்களும் விசுவாசமடி
காமன்மைத்துனனைத் தொண்டுபண்ணிகதிர்
காமமென்ற பேரையுண்டுபண்ணி
மாமுனிவோர்கள் கொண்டுவந்தநம்ம
வள்ளிமணுள னிவன்தாண்டி
மன்னவரே கவிசொன்னவரேயிங்கு
வாருமையா சொல்லக்கேளுமையா
மின்னியவேலவரை வாழ்த்தமுறை
விளங்கச்சொல்லும் பணிந்தேத்த
விளங்கும்தீப தெரிசனமும்தவில்
மேளம்தவண்டை முரசினமும்

முழங்கச்சன்னதி முன்பம்கச்சென்று
மூலஸ்தானத்தைப்பாருங்கடி
மூலஸ்தானந் தெரியாமேசபை
முஸ்தப மண்டபந்தோணுமே
சீலமிகுகந்தன் சன்னதியிலிட்ட
திரைமறைப்பிங்கே யேதுக்கையா
திரைமறைப்பு வளமையடிகந்தன்
சேவடிகாண்ப தருமையடி
முறைதெரியாத மானிடர்க்குக்கந்தன்
மூன்மணிவாசலுந் தோணுது
மூன்மணிவாசல் கடக்கணுமேசுவாமி
மூலஸ்தான மடுக்கணுமே
நன்மையுகந்த கதிரேசன்தன்னை
நானறியவகை சொல்லுமையா
நானுமறிந்தது மில்லையடிசொன்னு
நம்புவையோ எந்தன்சொல்லையடி
தேனருந்தவழி தோணுவிட்டால்கந்தன்
சேவையும் காணமுடியாது
சேருவைகாண முடியாவிட்டால்இந்தச்
சிங்களவரெனும் ஸ்தானிகர்கள்
ஆறுமுகவ னறியாமல் நித்தம்
ஆருக்கலங்காரம் செய்வார்கள்
ஆருக்கென்ருல்வர்னப்பேளேயொன்று அதற்
கன்புற்றலங்காரம் செய்துகொண்டு
பாரியகேடக மீதேற்றிவீதி
பவனிவாராதுமுண்டுமெடி
பவனிவந்திடும் பேளையதுஎன்ன
பாவனையாகவே சமைந்தது
அவனியெலாம்புகழ்ந் தேற்றபேளக்
கருள்நிறைந்தது மெவ்விதங்காண்
அருள்நிறைந்து சமைந்தவித்தைவெகு
அந்தரங்கமிந்தப் பெட்டகத்தை
குறியறிந்து துலக்காவிட்டால்கண்டு
கொள்ளமுடியாது வள்ளலையே

வள்ள லுகந்திடும் கோவிலுக்குமுழு
வச்சிரத்தட்டோடு போடாமல்
தெள்ளியமாமணி மேடையெல்லாம்செய்து
செப்போடிட்டது மேதுக்கையா
செப்போடல்லவே தோழியரேஇது
சிவந்தபத்தரை மாத்தாகும்
ஒப்பாதபுவி மானிடர்க்குஇது
செப்போடாகவே தோணுமடி
செப்போடிட்டதை மாத்தையிலேபின்னும்
சீர்திருத்திவரி சாத்தையிலே
அப்போதங்குள்ள மூலஸ்தானத்தை
அறிந்துகொள்ளாரோ செல்லுமையா
அறிந்ததுண்டைய னுத்தரவால்பன்னி
ராண்டுக்கொருதர மாத்தினவர்
உரியசுத்தமவு னங்கொண்டுசமா
துகந்தடைந்தவர் கோடியுண்டு
கோடிபேருண்டென் றும் சொன்னவரேகந்தன்
கொலுவில்மகிமையும் சொன்னவரே
தேடிக்கொண்டாடும் கதிர்மலைமேல்கந்தன்
சேருவைசேகர மெப்படிகாண்
சேகரமான மலைகளுண்டுசுத்தி
திரண்டிருண்ட வனங்களுண்டு
ஏகமிருக சஞ்சாரமடி மலைக்
கிசைந்துபோனவ ரில்லையடி
போனவரந்த மலைவளத்தைச்சொல்லிப்
புகழக்கேட்டேன தன்விதத்தை
ஆனலவ ரெப்படிப்போனார்போக
லாகாதென்றெவ்விதம் சொல்லுவீர்காண்
ஆகாதென்றது மெய்தாண்டிமூரு
கையனுத்தரவினல்தாண்டி
ஏகினலந்தக் கதிர்மலைக்குவழி
யிசையத்தோணு மிருள்விலக்கி
இசையும்நல்ல வழியுமென்றீர்முன்னே
ஏகமிருக சஞ்சாரமென்றீர்

திசைக்குச்செல்லாமல் தட்டிடுமோ கண்டு
சேரும்படிவழி விட்டிடுமோ
விட்டுவிடாதது மெய்யதற்கேகதிர்
வேலவனுத்தர வாவதற்கே
தட்டுப்படாது மிருகமெலாம்வனம்
தாண்டியேயேறி நடந்திடலாம்
நடந்துகாணுவ தெந்தமலைகந்த
நாதனிருப்பது மெந்தமலை
அடர்ந்தமேளத் தொனிகளுண்டே அங்கே
அண்டர்கள்கூட்ட மதிகமுண்டே
அண்டர்கள்கூட்டமதிகமுண்டு அப்பால்
ஆறுமுகன்சபை யங்கேயுண்டு
கண்டாசைகொள்ளாத மானிடர்க்குசபை
காணவும்தோணுது தோழிப்பெண்ணே
தோணுதென்றது மெய்யவரும்இருள்
சூழந்தவனங்கள் கடந்தவரும்
காணுதமாமலைக் கேறினவர்சபை
கண்டுதொழாமல் வருவாரோ
கண்டுதொழுவ தெல்லாமலையும்எங்கள்
கந்தன்கனக சபைமலையே
தொண்டரல்லால் கண்டபேருமில்லை
அங்கே துடிவயிரவன் காவலடி
காவல்கொண்டமலைச் சார்பினிலேஎங்கள்
கர்த்தன்பவனிப் பதியினிலே
மேவுஞ்சமாதொன் றிருக்கிறதே அதை
விளங்கச்சொல்லு மெனக்குமதை
சொல்லுவேன்கேளு திரைகடந்தயோகத்
துரியதீதத் துறைகடந்த
நல்லமுத்துலிங்க சுவாமிக்கடிமுந்தி
ராஜரால்கட்டிய கோவிலடி
கட்டியகோவில் சிறந்ததிலேகதிர்
காமம்சிவஸ்தல மானதிலே
முட்டிவணங்கி முகையதீனென்கிற
முழக்கமிங்கேது சொல்லுமையா

முழக்கமான நபிவரத்தில்வந்து
முத்தியடைந்தன ரித்தலத்தில்
வழக்கமாக முசலீன்கள் நிதம்
வந்துவணங்குந்தீன் சத்தமடி
தீனதுகூறிய மாபதியில்நல்ல
சித்திரவேலவன் சன்னதியில்
தானமும்தர்மமும் செய்யவென்றுஅன்னச்
சத்திரம்கட்டினதார்காணும்
கட்டியமாமடம் செட்டியடிதர்ம
கர்த்தரெனும் நகரத்தார்கள்
ஒட்டியபொதிகை யிட்டமைத்தார்புகழ்
உயர்ந்ததர்மம் மடம்சமைத்தார்
உயர்ந்ததர்மம் மிகுந்தோர்கள்செல்வ
மோங்கும் வசியகுலத்தார்கள்
இசைந்துவந்தவரைத் தேடியன்னம்
ஈவதுமுண்டோ மனம்நாடி
நாட்டியதர்மம் மிகக்கொடுத்துக்கந்த
நாதன்கதிரேசன் வேலெடுத்து
ஆடித்திருவிழா நாளையிலேஇவ
ராண்டுக்கொருதரம் வாரதுண்டு
வாரதுண்டுநகரத்தார்களென்று
மன்னவரேசொன்னீ ரின்னகரில்
ஆறுமுகன்கதி ரேசனுக்குஇது
ஆடித்திருவிழா முக்கியமோ
முக்கியமாய்க்கதிர் காமத்திலேசுற்றி
முக்கோணசக்கர வீதியிலே
சக்கரபாணி மருகரெனும்கந்த
சாமிதிருவிழாக் கூட்டமடி
கூட்டமும்பாட்டமும் கொண்டாடும்குடை
கொடிவிருதுகள் நின்றாடும்
நாட்டமுடைய திருநாளில்நிதம்
நடத்துகின்ற வளமையென்ன
வளமைவேழத்தின் மேல்மிகுத்துகந்தன்
மாணிக்கப்பேழை தனிலுகந்து

கலைதுலங்கிய வீதியிலேவரும்
கந்தன்பவனியைப்பாருங்கடி
கந்தனுக்கொத்த திருநாளிலிந்தக்
காசினியோரும் வருநாளில்
செந்தமிழோர்களும் கொண்டாடக்கந்தன்
தேறுமேலேறுவ தென்றைக்கையா
தேருமேலேரும் வளமையில்லை சித்திர
தேருமிழுப்பது மிங்கேயில்லை
நேருடன்தண்டிகை மீதேறிசுவாமி
நீராறுப்பானதைப் பாருங்கடி
நீராறுப்பென்றதும் தோன்றலையேஇப்போ
நீர்சொன்னபாஷை விளங்கலையே
நேருமின்னாட்டு வளமைகளோஇதைச்
சீருடனேசொல்ல வேணுமையா
சீருள்ளமாணிக்கக் கெங்கையிலேசுவாமி
தீர்த்தங்கொடுத்தருள் செய்யயிலே
நேருள்ளசிங்களப் பாஷையிலேயிதை
நீராறுப்பென்பதும் மெய்தாண்டி
மெய்யான ஆறு முகவரெனும்சுவாமி
மேவியவள்ளி தெய்வானையெனும்
தையலர்மேவும் கதிர்காமந்தனை
தான்கண்டபேருக்கு முத்தியுண்டோ
முத்தியுண்டங்கு நினைத்தாலுந்தவ
முத்தர்புகழ்கதிர் காமம்வந்தால்
சித்தியுமுத்தியு முண்டாகும்பிணி
சேராதருள்வார் முருகேசன்
கேசவன்தன்னருமைக் குரியவள்ளிக்
கிசைந்தகந்தன் புகல்புரிய
வாசமிகுந்த தமிழிதனைச்சொன்ன
மன்னவரேயுமக் கெந்தவூரு
மன்னர்புகழ்ராம நாதபுரம்சேது
மாநகரம்திருப் புல்லாணி
நன்னயமாகியஊர்தாண்டி தங்கம்
ராமசாமியெந்தன் பேர்தாண்டி

பேரையுமூரையு மேபுகழ்ந்து சொன்ன
பேர்பெற்றமானகர் மீதிருந்த
தாருலவுங்கதிர் காமத்துக்கேநீரும்
தானிங்கேவந்த வயணமென்ன
வந்துகொழும்பதனிற் சிறந்துவெகு
வாசமதாய்ச்சில நாளிருந்து
கந்தன்பவனியைக் கண்ணாலேகண்டு
கைதொழுதேத்தவும் வந்தேனடி
கைதொழுதேத்தியே மெய்வாசன்நம்ம
கந்தன்கதிரை முருகேசன்
தெய்வானைவள்ளி மணாளனின்மேலினி
செந்தமிழால்துதி சொல்லுமையா
சொல்லச்செவியுற்றுக் கேட்டவர்க்குவரும்
துன்பமகற்றுமிப் பாட்டவர்க்கும்
தில்லையெல்லாம்வல்ல தாண்டவத்தால்வாலை
தேவிசிவகாமி யின்தவத்தால்
அருள்பொருந்திய பூவாசன்வள்ளி
யம்மைதெய்வானை கதிரேசன்
திருவிழாவிற் சிறந்தவராம்கந்தன்
தீர்த்தங்கொடுத்தருள் தந்தவராம்
தலத்தில்முக்கியம் பெற்றவண்டிகந்த
சாமிக்குசிங்காரம் நித்தமடி
முப்பத்துமுக்கோடி தேவருக்கும்நல்ல
மூவருக்கும்புவி யாவருக்கும்
நாற்பத்தெண்ணாயிரம் தானவர்க்கும்திரு
நாவலர்க்கும்திசை காவலர்க்கும்
சிங்காரக்கும்மி தமிழ்ச்சிறக்கும்நம்மள்
செங்கைவேலன் கதிரேசனுக்கும்
மங்கையர்வள்ளி தெய்வானையர்க்கும்ஜெய
மங்களம்வாழி மிகவாழி
சித்திரவேலா யுதம்வாழிகந்தன்
சேவல்மயிலு மிகவாழி
சத்தியருள்கந்தன் 'சன்னதியில்புகழ்
சாமியிடும்பனும் வாழியதாம்.

...ங்கள்! புத்தகத்திற்கு முந்துங்கள்!!

மதுரைத்தமிழ் வித்வான்,

ஸ்ரீ: நா. கிருஷ்ணசாமி நாயுடவர்கள் இயற்றிய

# சங்கீத பாகவதம் அல்லது

சம்பூர்ண

# ஸ்ரீ: கிருஷ்ணலீலா.

தற்கால நாகரிக வர்ணமெட்டுக்களிலமைந்த செஞ்சொற் பாக்களுடனும், இனிய செந்தமிழ் வசன நடையுடனும் வெளிவந்துளது.

முதல் இரண்டு பாகம் தனித்தனி விலை அணா 0—4—0

ஷையாரியற்றிய

| | | |
|---|---|---|
| சாவித்ரி சத்யவான் 1, 2 பாகம் தனித்தனி | ,, | 0—4—0 |
| நல்லதங்காள் சரித்திரம் 1, 2 பாகம் தனித்தனி | ,, | 0—4—0 |
| இராமாயணத்திருப்புகழ் காவடிச்சிந்து | ,, | 0—2—0 |
| ஷை காந்தி தியானம் சிங்காரப்பாட்டுகளுடன் | ,, | 0—1—0 |

## முத்தமிழ் க்ஷேத்திர மதுர பாஸ்கரதாஸவர்களியற்றிய

| | | |
|---|---|---|
| இந்து தேசாபிமானிகள் செந்தமிழ்த் திலகம் 1, 2 பாகங்கள் | விலை அணா | 0—6—0 |
| புதிய பெரிய பக்திரஸக் கீர்த்தனங்கள் | ,, | 0—5—0 |
| ஷை இரண்டாம் பாகம் | ,, | 0—5—0 |
| லலிதாங்கி சரித்திரம் ஷை யாரியற்றியது | ,, | 0—8—0 |
| வள்ளியம்மை சரித்திரம் ஷை | ,, | 0—6—0 |
| அதிரூப அமராவதி ஷை | ,, | 0—6—0 |
| சகுந்தலா 1, 2 பாகங்கள் ஷை | ,, | 0—8—0 |

## உடுமலை முத்துசாமிக் கவிராயரவர்களியற்றிய

| | | |
|---|---|---|
| ...ராமநாடகம் (படங்களுடன்) | விலை ரூ | 2—0—0 |
| ...கிரஸ கீர்த்தனங்கள், 1, 2-பாகம் தனித்தனி | | 0—5—0 |

...நோதவிகடசிந்தாமணி இரண்டாம் பாகம். கினைக்கும்போதெல்லாம் சிரிப்பையுண்டாக்கும் சிறந்த கதைகள் 0—8—0

## ...வும்பாசமுத்திரம் சுப்புசாமி அய்யரவர்களியற்றிய

...ாயணச் சிந்து 0—2—0

...டபுரம் கவிக்குஞ்சர பாஷியம் அவர்களியற்றிய சௌ சௌ ... டிராமாச் சரித்திரங்கள் ஒன்று சேர்ந்தது. 0—6—0

இ. மா. கோபாலகிருஷ்ணக்கோன்,

புத்தகவியாபாரம், புதுமண்டபம், மதுரை.